## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – II
### 2008/2009 (யூன்/யூலை 2010)

LIBRARY
Eastern University, Sri Lanka.

### TLS 3203 குறிப்பிட்ட பாடநூல்கள் III (கி.பி.9ம் நூற்றாண்டு வரையானவை)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

---

01. பின்வரும் பாடற் பகுதிகளுக்குப் பொருள் தருக.

அ.(i) அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு

(ii) இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

ஆ. உள்ளார் கொல்லோ தோழி கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போல
செங்காற் பல்லி தன் துணை பயிரும்
அங்காற் கள்ளி அம் காடு இறந்தோரே

இ. எருமை யன்ன கருங்கல் லிடைதோறு
ஆனின் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
நீ ஓராகலின் நின் னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே அது பெறல் அருங்குரைத்தே

ஈ. காயமலர் நிறவா கருமுகில் போலுருவா
கானக மாமடுவில் காளியன் உச்சியிலே
தூய நடம்பயிலும் சுந்தர என் சிறுவா
துங்கம தக்கரியின் கொம்பு பறித்தவனே
ஆயம் அறிந்து பொருவான் எதிர் வந்த மல்லை
அந்தரமின்றி யழித்து ஆடிய தாளிணையாய்
ஆய எனக் கொருகால் ஆடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே

02. சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை ஆராய்க.
(அ) புகார் நகரச் சிறப்பு
(ஆ) கோவலன், மாதவி ஆகியோரின் குணநலன்
(இ) காவிரியின் சிறப்பு

03. நந்திக் கலம்பகத்தில் நந்திவர்மனின் சிறப்புக்கள் வெளிப்படுமாற்றினை விளக்குக.

04. குறுந்தொகைப் பாடல்களில் தலைவியின் பிரிவுத்துயர் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

05. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.
(அ) பெரியாழ்வார் திருமொழியில் வெளிப்படுத்தப்படும் திருமாலின் சிறப்புகள்
(ஆ) கபிலர் நோக்கில் சேரமான் கடுங்கோ
(இ) நந்திக்கலம்பக கையறு நிலைப் பாடலில் ("வானூறுமதியை") அவலச்சுவை
(ஈ) குறுந்தொகைப் பாடல்களின் உவமைச் சிறப்பு

***********



17